**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை
I.A. 1/2023 in O.S. No.45/2022**

R.முத்தையா ..... மனுதாரர்/வாதி

**/எதிர்/**

1. P.பசுபதி
2. K. சத்தியலீலா
3. P.ராமகிருஷ்ணன்
4. P.மௌனகுருநாதன்
5. P.லோகலெட்சுமி
6. தண்ணம்மாள்
7. சுந்தரவேல்
8. பழனியப்பன் ..... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்
9. ராஜேஸ்வரி
10. செல்வி ...... புரோ 9,10 எதிர்மனுதாரர்கள்/ புரோ 9,10 பிரதிவாதிகள்

இம்மனுவானது 02.02.2026 அன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.S.நிர்மல்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இன்று வரை

இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

**உத்தரவு**

மனுவில் கொடுத்துள்ள நபர்களை மேற்படி வழக்கில் முறையே 9, 10 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவுரை சுருக்கம்:–**

மனுதார் அசல் வழக்கில் வாதி ஆவார். தாவா வழக்குச் சொத்துக்களை செக்யூரிட்டியாக கொடுத்து மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 5 எதிர்மனுதார்களின் தகப்பனாரும், 6ம் எதிர்மனுதாரின் மகனுமான பால்ராஜ் அவர்கள் மேற்படியாரின் அவசர நிமித்தமாகவும், குடும்ப செலவுக்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும், கடந்த 15.06.2019ம் தேதியில் மனுதாரரிடம் கடனாக ரொக்கம் ரூ. 12,00,000/– பெற்றுக் கொண்டு அதற்கு ரூ.100/–க்கு மாதம் 1க்கு ரூ.1 வீதம் வட்டி சேர்த்து, கூடிய வட்டியும் முதலும் செலுத்தி வைப்பதாக கண்டு, மேற்படி 15.6.2019ம் தேதியில் மனுதார்க்கு ஒரு பிராமிசரி நோட்டை எழுதிக் கொடுத்துள்ளார்.

மேற்படி பால்ராஜ், மேற்படி கடன் தொகைக்கு யாதொரு தொகையும் செலுத்தி வைக்காத நிலையில், கடந்த 18.06.2019ம் தேதி அன்று Intestate ஆக மேற்படியாரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் தாயார் அவர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார். எனவே, தாவா கடனை பால்ராஜ் அவர்களுக்கு பாத்தியப்பட்ட எஸ்டேட்டின் மூலம் மனுதார்க்கு சட்டப்படி செலுத்தி வைக்க எதிர்மனுதார்கள் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

இந்நிலையில், கடன் தொகையை செலுத்தி வைக்கும்படி மனுதார் அவருடைய வழக்கறிஞர் மூலம் கடந்த 09.06.2022ம் தேதியில் எதிர்மனுதார்களுக்கு அனுப்பிய அறிவிப்பை மேற்படியார்கள் கடந்த 11.06.2022ம் தேதியில் பெற்றுக் கொண்டு, அதற்கு யாதொரு பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே மனுதார், பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் 3,4 பிரதிவாதிகளால், 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதப்பட்டுள்ள ஆவணம் 803/2022 Collusive and Fradulent Document என்றும் மற்றும் தாவா வழக்கு முடியும் வரை மேற்படி 7,8 பிரதிவாதிகள் வழக்கு சொத்து சம்பந்தமாக யார் ஒருவருக்கும் Alient செய்யக்கூடாது என்றும், இன்னும் மற்றுவிதமாகவும் கண்டு மேற்படி நம்பரில் அசல் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகின்றது.

இந்நிலையில் 7,8 பிரதிவாதிகள் சேர்ந்து தாவா வழக்குச் சொத்துக்களில் ஒரு பகுதியை போர்ஜரியாக மேற்படியார்களின் மனைவியான ராஜேஸ்வரி மற்றும் செல்வி ஆகிய இருவருக்கும் கடந்த 17.10.2022ம் தேதியில் ஆவண எண்.1988/2022–ன்படி கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கிரையம் தாவா வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் ஏற்பட்டதினால், மேற்படி கிரையம் சட்டப்படி Lispendence தோசத்திற்கு உட்பட்டதாகும். அது மட்டுமல்லாமல் மேற்படி கிரையமும் சட்டப்படி செல்லத்தகாத collusive and Fradulent Document ஆகும். மேற்படியார்கள் தாவா வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர்கள் ஆவார்கள். இதில் எதிர்மனுதார்களுக்கு யாதொரு நியாயமான ஆட்சேபணையும் இருக்க முடியாது.

எனவே, மனுவில் கொடுத்துள்ள நபர்களை மேற்படி வழக்கில் முறையே 9,10 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). **தீர்வு**

இவ்வழக்கானது மனுதாரர்/வாதியால் 1ம் பிரதிவாதியின் கணவர் வாதியிடம் வாங்கிய கடன் ரூ.12,000,00/-யையும் அதற்கான வட்டியையும் திரும்ப கொடுக்காமல் இறந்துவிட்டார் என்றும், வாதிக்கு ஆதரவாக ஒரு கடனுறுதிச் சீட்டை 1ம் பிரதிவாதியின் கணவர் எழுதிக்கொடுத்துள்ள நிலையில், 1ம் பிரதிவாதியின் கணவரின் வாரிசுகளிடம் அந்த கடனை திரும்ப செலுத்தி கேட்டபோது, அவர்கள் அதற்கு பதிலறிவிப்பு கொடுக்கவில்லை என்றும், அதற்கு பின்னிட்டு இந்த அசல் வழக்கை வாதி, பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்து அதில் 3,4 பிரதிவாதிகளால் 02.05.2022 அன்று 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்த ஆவண எண். 803/2022 ஆனது 1ம் பிரதிவாதியின் கணவர் பால்ராஜ்(லேட்) அவர்களால் செலுத்த வேண்டிய கடன் தொகையை மோசம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிகளால் கூட்டாக மற்றும் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட மேற்படி கிரைய ஆவணத்தை செல்லாது மற்றும் இல்லாநிலையது என விளம்புகை செய்யக்கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில்,

இந்த வழக்கின் மற்றொரு பரிகாரமாக இறந்த பால்ராஜின் வாரிசுகளிடமிருந்து, பால்ராஜ்க்கு கொடுத்த கடன் தொகையை வசூலிக்க வாதிக்கு சட்டப்படி உரிமை உண்டு என விளம்புகை பரிகாரமும், மேலும் இவ்வழக்கு முடியும் வரை தாவா சொத்தை 7,8 பிரதிவாதிகளுக்கும், அவர்களது

அதிகாரம் பெற்ற யார் ஒருவருக்கும் மாற்றம் செய்யக்கூடாது என்று தற்காலிக தடையுத்தரவு வேண்டியும் இந்த வழக்கு வாதியால் 01.07.2022 அன்று மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கானது நிலுவையில் இருக்கும்போதே, தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை 17.10.2022அன்று கிரைய ஆவண எண். 1988/2022ன் மூலம் உத்தேச 9,10 பிரதிவாதிகளான ராஜேஸ்வரி மற்றும் செல்வி ஆகியோர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரையம் Lispendence தோசத்திற்கு உட்பட்டது என்றாலும், இந்த வழக்கில் மனுதாரர்/வாதி கோரியுள்ள பரிகாரத்தின் தன்மை கருதியும், இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய கருப்பொருள் எழுவினா குறித்து முடிவு செய்வதற்கு முன்பாக, வழக்கிடையில் கிரையம் பெற்ற நபர்களையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெற வேண்டியது அவசியம் என்று மனுதாரர்/வாதியின் கூற்றானது சட்டப்படி சரியானது என்றும், இவ்வழக்கில் எழுவினாக்கள் இன்னும் வனையப்படாத சூழ்நிலையில், உத்தேச பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்ப்பதால் மற்ற பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், இவ்வழக்கை முழுமையாக தீர்மானிப்பதற்கு உத்தேச 9,10 பிரதிவாதிகள் அவசிய தரப்பினர்கள் தான் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இவ்வழக்கு சொத்தை பொறுத்து இறுதியாக தீர்மானிப்பதற்கு முன்பாக, கிரையம் பெற்ற நபர்களின் கட்சிகளை கேட்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாகும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, நீதியின் நலன் கருதி இவ்வழக்கில் உத்தேச பிரதிவாதிகளான 9, 10 பிரதிவாதிகளை ஒரு தரப்பினர்களாக சேர்ப்பதற்கு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியா கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.16 16:21:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.